# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - I,II | பாட எண் : 87 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

LMDMUnit

## பகுதி - I

**பின்வரும் வினாக்களில் மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடியிடுக.**

1) இன்றுள்ள காலகட்டத்தில் ஊடகங்கள் அனைத்தும் தனித்து இயங்குவதில் பயனில்லை என்னும் தன்மையினைப் பிரதிபலிக்கும் ஊடக வெளிப்பாடு,
   1) பிரஜைகள் ஊடகம்  2) வெகுஜன ஊடகம்
   3) இணைந்த ஊடகம்  4) புதிய ஊடகம்

2) நபரொருவர் ஐம்புலன்கள் வழியாகக் கிடைக்கப்பெறும் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு விளங்கிக் கொள்ளுதல்,
   1) பொருட்கோடல் ஆகும்  2) தொடர்பாடல் ஆகும்
   3) பின்னூட்டம் ஆகும்  4) புலக்காட்சி ஆகும்.

3) பாடசாலையில் நடைபெறுகின்ற ஊடக விழா தொடர்பில் கிராம மக்களுக்குத் தகவல் வழங்க மிகவும் பொருத்தமான குழுத்தொடர்பாடல் முறையாவது,
   1) அன்றாடம் செய்திப்பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்தல்.
   2) ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட நடமாடும் வாகனமொன்றைப் பயன்படுத்தல்.
   3) தனிப்பட்ட கடிதங்கள் மூலம் தகவல் வழங்குதல்.
   4) வீடு வீடாகச் சென்று கையேடுகளைப் பகிர்ந்தளித்தல்.

4) முதலாவது உலக தொலைக்காட்சித்தினம் எப்போது கொண்டாடப்பட்டது?
   1) 1997 November 21  2) 1987 November 23
   3) 1972 December 10  4) 2014 February 13

5) அச்சுப்பதித்தல் கலை ஐரோப்பா முழுவதும் வியாபிக்க காரணகர்த்தாவாக இருந்தவர் பின்வருவோரில்,
   1) குக்லியெல்மோ மார்க்கோணி  2) ஜோஹன்ஸ் குட்டன்பேர்க்
   3) வில்லியம் ஹக்ஸ்ரன்  4) சார்ளி சப்ளின்

6) ஆளிடைத்தொடர்பாடல் பெரும்பாலும்,
   1) செவிப்புல மற்றும் பேச்சுத் தொடர்பாடலின் கூட்டமாகும்.
   2) வாய்மொழி சார்ந்த மற்றும் வாய்மொழி சாராத தொடர்பாடலின் கூட்டமாகும்.
   3) காட்சிவழி மற்றும் வாய்மொழித் தொடர்பாடலின் கூட்டமாகும்.
   4) முறை சார்ந்த மற்றும் முறைசாராத தொடர்பாடலின் கூட்டமாகும்.

7) வானொலி நாடகம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்றது.
   1) பல கதாப்பாத்திரங்கள் இடம் பெற்றிருக்கும்.
   2) உள்ளத்தில் உளத்தோற்றச்சித்திரங்கள் உருவாகும்.
   3) ஒலிக்குறிப்புக்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.
   4) நிகழ்வினைத் தனித்துத் தெரியச் செய்ய இசை பயன்படுத்தப்படும்.

8) தகவல்களைப் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள்,
   1) அவதானிப்பு 2) மூளைப்புயல்
   3) ஆவணப்பரிசீலனை 4) மேற்கூறிய யாவும்

9) கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் உமது பாடசாலை மாணவியொருவர் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற செய்தி புகைப்படத்துடன் பத்திரிகையில் வெளியானது. இச் செய்தியை ஆர்வத்துடன் நீர் பெறுகை செய்வதற்கான செய்திப் பெறுமானம் பின்வருவனவற்றுள்,
   1) தாக்கமும் முக்கியத்துவமும் 2) வெளிப்படையாகத் தெரிதல்
   3) அண்மித்த தன்மை 4) அசாதாரண தன்மை

10) தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பற்றிய கல்விசார் நூலொன்றை அச்சிடும் தமிழினியன் அதற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும் முகமாக ISBN இலக்கமொன்றைப் பெற உத்தேசித்தார். இதற்காக அவர் அணுக வேண்டியது.
   1) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
   2) தேசிய நூலகம்
   3) தேசிய சுவடிகள் திணைக்களம்
   4) பொது நூலகம்

11) இலங்கையின் முதன் முதலான பிராந்திய ஒலிபரப்பு சேவை,
   1) ருஹூணு 2) மகாநுவர 3) இராஜரட்டை 4) வயம்ப

12) ஊடக அறிக்கையிடலில் நம்பகத்தன்மை பெருமளவில் தங்கியிருப்பது
   1) துல்லியம், நடுநிலைத்தன்மை, தெளிவு
   2) நடுநிலைத்தன்மை, கவரும் தன்மை, எளிமை
   3) தெளிவு, துல்லியம், கருத்தாக்கம்
   4) துல்லியம், நடுநிலைத்தன்மை, கவரும்தன்மை

LMDMUnit

13) * ஒருவழித் தொடர்பாடல்,
   * ஊடக உபகரணங்கள் அடிப்படையானது
   * தொழில்வாண்மை மிக்க தொடர்பாடுநர் காணப்படுவர்
   இவற்றுடன் தொடர்புடைய தொடர்பாடல் வகை,
   1) ஆளிடைத்தொடர்பாடல்
   2) வெகுசனத் தொடர்பாடல்
   3) சமூகத் தொடர்பாடல்
   4) அகமுகித் தொடர்பாடல்

14) புகைப்படக்கருவியில் ஒளியின் தீவிரத்தைக் குறைக்க பயன்படுவது,
   1) அபெர்ச்சர்  2) வில்லை  3) பிளாஸ்  4) சட்டர்

15) பேஜர் காலப்போக்கில் வழக்கிலிருந்து அகன்று சென்ற தொடர்பாடல் கருவியாகிவிட்டது இவ்வாறு வழக்கொழிந்து போக முக்கிய காரணியாக அமைவது,
   1) அதிகமான செலவீனம்.
   2) கையடக்க தொலைபேசியின் பரவல்.
   3) இணையத்தின் பரவுகை.
   4) பேஜர் கருவியை பயன்படுத்தலில் உள்ள சிக்கல்கள்

16) தகவல்களைச் சேகரிக்கின்ற ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பல்லாதது,
   1) ஒழுக்கமுடமை  2) நேரந்தவறல் இன்மை
   3) தந்திரோபாய தன்மை இன்மை  4) பொறுமையாற்றல்

17) அச்சூடகத்தின் அனுகூலமாக அமையக்கூடியது,
   1) தகவல்களை இற்றைப்படுத்த முடியாது.
   2) எந்த இடத்திலும் பயன்படுத்தக் கூடியது.
   3) பெரிய நிலப்பிரதேசங்களுக்கு உடனடியாக சேர்க்கமுடியாது.
   4) எழுத்தறிவின்றி பயன்படுத்த முடியாது.

18) நெடுங்கால ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி வகை,
   1) நேரடி வர்ணனை  2) செய்தி நிகழ்ச்சி
   3) மெய்மை நிகழ்ச்சி  4) விபரண நிகழ்ச்சி

19) உங்கள் கையிலுள்ள ஓர் ஆவணத்தினை அலுவலக இலட்சினையுடன் விரைவாக தொலைவிலுள்ள ஓரிடத்துக்கு அனுப்புவதற்கு பயன்படுத்தத்தக்க உபகரணமானது.
   1) டிஜிற்றல் பிரதியெடுக்கும் இயந்திரம் ஆகும்.
   2) தொலைநகல் ஆகும்.
   3) இலத்திரனியல் பேஜர் ஆகும்.
   4) தபால் முத்திரையிடல் இயந்திரம் ஆகும்.

20) பின்வருவோருள் தொடர்பாடல் பற்றிய கணித மாதிரியை முன்வைப்பதில் பங்காற்றியவர் யார்?
   1) எட்வர்ட் ஹாபர்  2) ஹியூக்ளிபர்ட்
   3) வொரன் வீவர்  4) ஹரோல்ட் டீ.லாஸ்வெல்

LMDUnit

21) பத்திரிகையின் அளவில் டப்லொய்ட் பத்திரிகையின் இயல்புகளுள் பொருத்தமற்றது.
   1) ஒப்பீட்டளவில் குறுகியது
   2) தேவைக்கேற்ற வகையில் அமையும்
   3) பொழுதுபோக்கான விடயங்கள் காணப்படும்
   4) வலுவான வெகுசன ஊடகம்

22) ஊடகத்தின் மீது துலங்கல்களை முன்வைக்கக்கூடிய முறைகளுள் பொருத்தமற்றது.
   1) குறுஞ் செய்திகள்
   2) நடைபவனி அல்லது ஆர்பாட்டம் ஒழுங்கு செய்தல்
   3) தொலைபேசி அழைப்பு
   4) கை தட்டல்

23) முரசு, கூக்குரலிடல் சாந்திச் சடங்குகள், பூஜைகள் போன்ற கருமங்கள் மானுடத் தொடர்பாடல்களின் அம்சங்களாகும் அவை,
   1) படைப்புத் தொடர்பாடல்
   2) பாரம்பரியத் தொடர்பாடல்
   3) பேச்சற்ற தொடர்பாடல்
   4) அபிவிருத்தித் தொடர்பாடல்

24) வரவு செலவு பற்றி எழுதிய செய்தியின் இலக்கங்கள் பிழையாக அச்சிடப்பட்டிருந்தன. மீண்டும் பரிசீலித்தபோது கையெழுத்துப் பிரதியில் சரியாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. இதற்குப் பொறுப்பானவர்.
   1) அச்சீட்டு ஊழியர்கள்
   2) எழுத்துக் கோர்ப்பவர்கள்
   3) ஒப்பு நோக்குபவர்கள்
   4) கணக்காளர்கள்

25) அன்றாடம் நாம் இரசிக்கும் தொலைக்காட்சி தொடர் நாடகத்தில் ஒரு பெண், ஆண் சமூகத்தினர்களால் வழங்கப்பட்ட தொழில், பொறுப்பு, நடத்தை போன்றவை தோற்றமளிக்கும். இந்நிலையை மிக நன்றாக எடுத்துக்கூறும் எண்ணக்கரு
   1) பெண்ணிலைவாதம்
   2) பால்நிலை
   3) ஆண்,பெண் நடத்தை
   4) பால்நிலை சமநிலை

26) பார்வையாளர்களுக்கு எடுத்துச் செல்லப்படும் ஒரு செய்தியின் மீது ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பார்கள். அவர்கள்;
   1) வாயிற்காப்பாளர்கள்
   2) தகுதி வாய்ந்த அதிகார பீடம்
   3) செம்மையாக்குனர்கள்
   4) ஒழுங்குபடுத்துனர்கள்

27) வகுப்பறையில் ஆசிரியர் புத்தகம் ஒன்றிலிருந்து வர்ணப் படத்தை மாணவர்களுக்கு காட்சிப்படுத்தினார். இதற்காக உபகோகிக்கப்பட்டிருக்கக் கூடிய எறிவை உபகரணம்,
   1) மேந்தலை எறிவை
   2) பல்லூடக எறிவை
   3) துரித எறிவை
   4) வழுக்கி எறிவை

28) வெகுசன ஊடகத்தில் விளம்பரங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. அச்சூடகம் ஒன்றில் விளம்பரம் ஒன்றிற்காகக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளுடன் தொடர்புபடாத அம்சம்,
   1) விளம்பரத்தின் உள்ளடக்க நிறம்
   2) விளம்பரத்தின் அளவு
   3) விளம்பரத்தின் உள்ளடக்கத்தன்மை
   4) விளம்பரம் இடம்பெறும் பக்கம்

LMDMUnit

29) வித்தகனுக்கு ஊடகத்தை விமர்சனம் செய்யும் ஆற்றல் உண்டு. ஆனால் அவற்றை பயன்படுத்துவதில்லை. அதேவேளை சிறுசிறு குழுக்களில் அவ் ஆற்றலை வெளிப்படுத்தும்தன்மை உடையவன். ஆகவே அவர்.

1) மந்த பெறுநர் 2) செயற்படாத பெறுநர்

3) விழிப்புணர்வுமிக்க பெறுநர் 3) செயற்படு பெறுநர்

30) வாய்மொழி அற்ற தொடர்பாடலில் தனியாள் இடைவெளி அதிக செல்வாக்கை பெறுகின்றது. ‘‘நெருங்கிய நண்பர்கள் தொடர்பாடல்’’ உள்ளடங்குகின்ற இடைவெளியைக் குறிப்பது

1) நேச இடைவெளி 2) சமூக இடைவெளி

3) தனியாள் இடைவெளி 4) மக்கள் இடைவெளி

31) ஆகக் குறைந்த 49 பக்கங்கள் இருக்க வேண்டும் என்ற யுனெஸ்கோ வரைவிலக்கண கூற்று தொடர்புடையது.

1) சஞ்சிகை 2) புத்தகம் 3) சிறுநூல் 4) செய்திமடல்

32) செய்திப்பத்திரிகைக்கான புகைப்படங்கள் தொடர்பிலான சில கூற்றுக்கள் பின்வருமாறு:

A- கல்வியறிவற்ற மக்களுக்கு அவசியமானதன்று.

B- செய்தியின் நம்பகத்தன்மையை அதிகரிக்கின்றது.

C- கவரும் தன்மையை செய்திப்பத்திரிகை பெறுகின்றது.

மேற்குறித்த கூற்றுக்களில்,

1) A யும் B யும் சரியானவை

2) B யும் C யும் சரியானவை

3) A யும் C யும் சரியானவை

4) மேற்கூறிய யாவும் சரியானவை

33) கமரா ஒன்றில் கட்டாயமாக காணப்படவேண்டிய பகுதிகளில் உள்ளடங்காதது,

1) வில்லை 2) வில்லைத்தூரம் 3) துவாரப்படலம் 4) எதிர்ப்படலம்

34) டிஜிற்றல் புகைப்படப்பிடித்தலின் சிறப்பம்சங்கள் பற்றி வகுப்பறையில் பின்வரும் மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட கூற்றுக்கள் வருமாறு.

கதிர் :எடுத்த புகைப்படத்தை உடனடியாகப் பார்வையிடலாம்.

விது :செயற்திறன் கூடிய செம்மையாக்கல் வசதி உண்டு

பவி :கணணியுடன் தொடர்பினை ஏற்படுத்துவதில் சற்று கடினமாக காணப்படுதல்

கயா :கூடிய ஒளியுள்ள போது மாத்திரமே புகைப்படம் எடுக்கக் கூடியதாக காணப்படும்.

மேற்குறித்த கூற்றுகளில்,

1) கதிர், விது, பவியினது கூற்றுக்கள் சரியானவை.

2) விது, பவி, கயா வினது கூற்றுக்கள் சரியானவை.

3) கதிர், விது ஆகியோரது கூற்றுக்கள் சரியானவை.

4) அனைவரினது கூற்றுக்களும் சரியானவை.

35) ரேகைகள், சமிக்ஞைகள் வரைதல் அடையாளங்கள், மண் சுவரொட்டிகள், மிருகங்களின் தோல் ஆகியன பயன்படுத்திய எழுத்து மொழிக் காலத்தின் வகை,

1) கற்காலம் 2) புராதனகாலம் 3) இடைக்காலம் 4) நவீனகாலம்

36) ரயில் நிலையமொன்றில் ரயிலிற்காக காத்திருக்கும் பயணிகள் குழு தங்களுக்கிடையே உரையாடத்தொடங்கினர். இத் தொடர்பாடலானது.

1) ஆளிடைத் தொடர்பாடல் 2) முறைசார் தொடர்பாடல்


3) அகமுகித்தொடர்பாடல் 4) முறைசாராத தொடர்பாடல்

37) தலைகீழ் பிரமிட்முறை மற்றும் தலைமேல் பிரமிட்முறை ஆகிய தொடர்புபடுவது

1) ஊடக விளக்கறிவுடன் 2) நிறுவன கட்டமைப்புடன்

3) செய்தி அறிக்கையிடலுடன் 4) தொடர்பாடல் வகையுடன்

38)




மேற்குறிப்பிட்ட தொடர்பாடல் மாதிரியில் P இனை தகவல் மூலமாக கருதப்பட்டால் S குறிப்பது பின்வருவனவற்றுள்,

1) ஊடு கடத்தி 2) உச்சஸ்தானம்

3) இரைச்சல் 4) சமிக்ஞை

39) புகைப்படப் பிரதியெடுக்கும் கருவியின் தொழில்நுட்பக்கோளாறினால் பெறப்பட்ட பிரதியானது வாசிப்பதற்கு கடினமாக அமைந்தது. மேற்கூறப்பட்ட மாதிரியில் இதனைப் பிரதிநிதித்துவம் செய்யும் எழுத்து,

1) R 2) Q 3) T 4) P

40) பல்வேறு சேவைகள், தொழில்கள் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்தல் குறிப்பது,

1) சமூகப் பிரதிநிதித்துவம் 2) அரசியல் பிரதிநிதித்துவம்

3) ஒழுங்குமுறைப் பிரதிநிதித்துவம் 4) பொருளாதார பிரதிநிதித்துவம்

LMDMUnit

## பகுதி - II

முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) ரவியும் ராதாவும் நேற்றைய தினம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நாடகத்தின் ஒரு பகுதி தொடர்பில் உரையாடிக்கொண்டிருந்தனர்.

1) மேற்குறித்த கருப்பொருளின் படி இடம்பெற்ற தொடர்பாடல் எவ்வகைக்குரியது?
2) தொலைக்காட்சி நாடகமொன்றின் மூலம் எதிர்பார்க்கப்படும் தொடர்பாடல் செயற்பாடு யாது?
3) மேற்குறித்த தொலைக்காட்சி நாடகம் குறைந்த செலவுடன் கூடுதலான அங்கங்களுடன் ஒளிபரப்பப்படுமெனில் அதற்குரித்துடைய தொலைக்காட்சி நாடக வகை யாது?
4) தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நாடகமானது நாட்டில் நிலவிய காலநிலை தாக்கத்தினால் தடைப்பட்டது. இது எவ்வகைத் தொடர்பாடல் தடை ஆகும்.
5) வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புச் செய்வதற்கு அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டை எடுத்துக் காட்டும் விதம் யாது?
6) தொலைக்காட்சியில் குறித்த நாடகம் தொடர்பாக வினாவப்பட்ட வினாவுக்கு விடை அளிப்பதன் மூலம் பரிசொன்றை வெல்வதற்கு வாய்ப்பு இருப்பதாக ரவி எண்ணினார். இவ் எண்ணம் எந்தத் தொடர்பாடல் வகைக்குரியது?
7) தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நாடகம் தொடர்பில் தனது அபிப்பிராயங்களை குறித்த தொலைக்காட்சி ஊடகத்திற்கு அனுப்பவுள்ளதாக ராதாவிடம் ரவி தெரிவித்தார். இதற்கு ரவி பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
8) மேற்குறிப்பிட்ட உரையாடலில் இடம்பெற்ற வெகுசன ஊடகத்தினைத் தவிர எவையேனும் இரண்டு வெகுசன ஊடகங்களைக் குறிப்பிட்டு ஒவ்வோர் உதாரணம் தருக.
9) மேற்குறிப்பிட்ட தொலைக்காட்சி நாடகத்தினை வானொலிநாடகமாக மாற்றும்போது பயன்படுத்தத்தக்க இரண்டு பிரதான ஒலி வகைகளைப் பெயரிடுக.
10) மேற்குறிப்பிட்ட தொலைக்காட்சி நாடகத்தில் சித்திரிக்கப்பட்ட பெண் பிள்ளைகளின் வகிபாகம் பற்றிக் கற்கும்போது பயன்படுத்தத்தக்க சமூகம் பிரதிநிதித்துவக் கற்கை தொடர்பான எண்ணக்கரு யாது?

(10x2=20 புள்ளிகள்)

02) மக்களால் தம் தேவைகளுக்காக புராதன காலம் தொடக்கம் தேவைக்கேற்றவாறு அச்சுக்கலை வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன.

1) அச்சூடகத்தின் வேறுபட்ட வகைகள் இரண்டினைப் பெயரிடுக.
2) அச்சூடகத்தில் காணப்படும் இயல்புகள் 2 தருக.
3) பத்திரிகை ஒன்றில் உள்ளடங்கும் விடயங்கள் 3 இனைக் குறிப்பிட்டு, விபரிக்குக.
4) வாசகனுக்கேற்ப பத்திரிகையில் காணப்படும் விசேட தன்மைகள் நான்கினைத் தருக?

(1+2+3+4=10 புள்ளிகள்)

LMDMunit

03) வெகுசன ஊடகத்தினூடாக நடைபெறுகின்ற தொடர்பாடல்களின் படைப்பாக்கத் திறனுக்கு அதிக இடம் வழங்கப்படுகின்றது.

1) படைப்பாக்கமொன்றின் பொதுவான பண்புகள் 2 இனைப் பெயரிடுக.

2) படைப்பாக்கம் மிக்க தொடர்பாடலில் பயன்படுத்தக்கூடிய கட்புல வெளியீட்டு விதிகள் 4 இனை குறிப்பிடுக.

3) புலமைச் சொத்துச் சட்டத்தில் உள்ள உரிமைகள் இரண்டினையும் குறிப்பிட்டு விபரிக்க.

4) இலங்கையில் ஊடகங்களின் செயற்பாடுகளைத் ஒழுங்குபடுத்துவதற்காக உள்ள பின்வரும் அமைப்புக்களின் தொழிற்பாடுகளைத் தருக.

1. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
2. இலங்கை திரைப்பட தணிக்கை சபை (1+2+3+4=10 புள்ளிகள்)

04) "புகைப்படம் ஒரு கட்புல ஊடகமாகும்"

1) புகைப்படம் எடுக்கும்போது அதனுடன் தொடர்புபடும் அம்சங்கள் 4 தருக.

2) நிழற் புகைப்படப்பிடிப்பின் சிறப்பம்சங்கள் இரண்டு தருக.

3) புகைப்படக் கலையானது பல்வேறு வழிகளில் பயன்படுகின்றது. அவ்வாறு பயன்படும் 3 வழிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

4) நிலைத்த புகைப்பட இதழியல் கலையினால் அச்சூடகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் 2 இனை விளக்குக. (1+2+3+4= 10 புள்ளிகள்)

05) "தொடர்பாடல் செயல் ஒழுங்கிற்கு பல்வேறு வகைகள் வடிவங்கள், காணப்படுகின்றன.

1) தொடர்பாடல் எக்காரணிகளை மையப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன.

2) தொடர்பாடல் வடிவங்கள் 4 தருக.

3) தொடர்பாடல் வகைகளினைக் குறிப்பிட்டு விளக்குக.

4) நிறுவனம் ஒன்றில் முறைசார் தொடர்பாடல் இடம்பெறும் வழிமுறைகளை விபரிக்குக.

(1+2+3+4= 10 புள்ளிகள்)

06) "செய்தி என்பது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதும் அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றதுமான கடந்தகால முக்கிய சம்பவமொன்றுடன் தொடர்புடைய ஒரு புதிய தகவலாகும்"

1) செய்தியின் பிரதான வகைகளைக் குறிப்பிடுக.

2) செய்தி பற்றிய "மில்ரன்பிரஷ்" வரைவிலக்கணத்தினைத் தருக.

3) செய்தியொன்றின் பெறுமதியைப் பாதிக்கும் காரணிகள் 3 இனைக் குறிப்பிட்டு விபரிக்க.

4) தகவல் மூலாதாரம் என்றால் என்ன? அவற்றுக்கான உதாரணங்களையும் குறிப்பிடுக.

(1+2+3+4= 10 புள்ளிகள்)

07) 1) இலங்கையில் தற்போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானொலி அலை வகை எது?

2) இலங்கையிலுள்ள ஊடக உரிமையாண்மையின் வகைகளைக் குறிப்பிடுக.

3) வானொலி ஊடகத்தில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் 3 இனை குறிப்பிட்டு விபரிக்குக.

4) வானொலி ஊடகத்தின் வரையறைகள் 4 இனை விளக்குக.

(1+2+3+4= 10 புள்ளிகள்)

LMDMUnit